# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம்

---

*(2002, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2002, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 28.75 தபாற் செலவு : ரூபா 9.00

# 2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டம்

[2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.— ஒ. 06/2000

**இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையைத் தாபிப்பதற்கும் : சிவில் விமானப் போக்குவரத்து திணைக்களத்தினது சொத்துக்கள், ஒப்பந்தங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் அனைத்தையும் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு கைமாற்றம் செய்வதற்கும், சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியை நியமிப்பதற்கும் : அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பிடப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பகுதி I

## இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையைத் தாபித்தலும் அதன் அமைப்பும்

2. (1) (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபை என அழைக்கப்படுகின்ற அதிகாரசபை ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையைத் தாபித்தல்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினை ஒன்றையும் கொண்டிருத்தலும்

வேண்டும் : அத்துடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

அதிகார சபையின் அமைப்பு.

3. (1) அதிகாரசபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(அ) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஆ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அந்த அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர் ;

(இ) அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஐந்து ஆட்கள் ; இவர்களுள் இரண்டு பேருக்குக் குறையாதோர் சிவில் வான் போக்குவரத்துத் துறையில் கணிசமான அனுபவத்தை அல்லது அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஈ) பணிப்பாளர் தலைமையதிபதி.

(2) அமைச்சரானவர் அதிகாரசபையின் உறுப்பினரொருவரை அதிகாரசபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டுமென்பதுடன், வேறு ஓர் உறுப்பினரை அதன் உப தவிசாளராக நியமித்தலும் வேண்டும்.

(3) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின் (இ) பந்தியின் கீழ் உறுப்பினர் ஒருவரை நியமிக்கையில், அத்தகைய உறுப்பினராக அவரது பணிகளைப் புரிவதைப் பங்கமாகப் பாதிப்பதற்கு சாத்தியமானதாகவிருக்கின்ற ஏதேனும் விமான அல்லது விமானப் போக்குவரத்து தொடர்பான தொழிலில் நிதிசார் அல்லது வேறு அக்கறையை அத்தகைய உறுப்பினர் கொண்டிருக்கவில்லையென்று அவர் தன்னைத் திருப்திப் படுத்தல் வேண்டும். அத்துடன் மேலும் அத்தகைய உறுப்பினர் அத்தகைய அக்கறையை உடையவரல்ல எனவும் காலத்துக்குக் காலம் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதலும் வேண்டும்.

(4) தவிசாளரானவர் எழுத்திலான அதிகாரத்தின்மூலம் தவிசாளராக அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிகளுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அதிகாரசபையின் எவரேனும் உறுப்பினருக்கு அதிகாரமளிக்கலாம்.

(5) இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் உறுப்பினர்கள், அதனது கூட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் இலச்சினை என்பன தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

அதிகாரசபையினால் செய்யப்படவிருக்கின்ற ஏதேனும் தீர்மானத்தில் உள்ள ஏதேனும் அக்கறையை உறுப்பினர்கள் வெளிப்படுத்தல்.

**4.** அதிகாரசபையின் ஏதேனும் நடவடிக்கை அல்லது கருத்திட்டத்தின் மேல் எடுக்கப்படவிருக்கின்றதான ஏதேனும் தீர்மானத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக அக்கறை யுடைய அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், தீர்மானம் எடுக்கப்படவிருக்கின்றதான அதிகாரசபையின் கூட்டத்தில் அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிப்படுத்துதல் வேண்டும். அவ்வெளிப்படுத்துகை கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்களில் பதிவுசெய்யப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் அந்த நடவடிக்கை அல்லது கருத்திட்டம் தொடர்பில் அதிகாரசபையில் ஏதேனும் கலந்துரையாடல் அல்லது தீர்மானத்தில் பங்குபற்றுதலும் ஆகாது.

வரையறுக்கப்பட்ட காலம் ஒன்றிற்கு குறிப்பிட்ட சில பொறுப்பேற்றலிலிருந்து தடை செய்தல்.

**5.** பணிப்பாளர் தலைமையதிபதி அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக பதவிவகிப்பதிலிருந்து இல்லாதொழிக் கப்பட்ட பின்னர், ஒருவருட காலத்திற்கு அத்தகைய உறுப்பின ராக பதவிவகிக்கும் காலத்தின்போது அதிகாரசபையால் ஒழுங்குபடுத்தற் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்துத் தொழிலில் உள்ள ஏதேனும் அமைப்புடன் ஏதேனும் தொழிலை அல்லது ஒதுக்கப்பட்ட வேலையை (ஒப்பந்த அல்லது வேறுவகையில்) பொறுப்பேற்றல் ஆகாது.

குழுக்களை நியமித்தல்.

**6.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதற்கு உதவும் நோக்கத்திற் காக பொருத்தமானதாக அது கருதுகின்ற அத்தகைய எண்ணிக்கையினதான குழுக்களை அதனது சொந்த உறுப்பி னர்களிடையே அல்லது அது தகுந்தது எனக் கருதக்கூடிய வாறான ஆட்களிடையே இருந்து நியமிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, அதனது தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய குழுவுக்கு அது பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான, அத்தகைய நியதிகள் நிபந்தனைகளுக்கு அமையக் கையளிக்கலாம். அத்துடன் அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அதிகார சபையின் பெயரிலும் அதிகாரசபையின் சார்பிலும் அத்தகைய குழுவினால் பிரயோகிக்கப்படலாம்.

(3) அதிகாரசபையானது, (2) ஆம் உட்பிரிவின்கீழ் குழு ஒன்றுக்கு அதனது தத்துவங்களுள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் கையளிப்பது எப்படியிருப்பினும், அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக் கலாம்.

## பகுதி II

### அதிகாரசபையின் தத்துவங்களும், பணிகளும் கடமைகளும்

அதிகார சபையின் தத்துவங்களும், பணிகளும் கடமைகளும்.

7. அதிகாரசபையானது, சமவாயத்தின்கீழான இலங்கையின் கடப்பாடுகளுடன் இணங்குகின்ற முறையில், பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும் :

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இணங்க, அமைச்சரால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு அமைய, இலங்கையின் ஆள்புல எல்லையினுள் சிவில் விமானச் செயற்பாடுகளையும், அத்துடன் இலங்கையின் ஆள்புலத்திற்கு வெளியே பதிவு செய்யப்பட்ட இலங்கை விமானங்களின் செயற்பாடு களையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ஆ) இலங்கை தேசிய விமானப் போக்குவரத்துக் கொள்கையை வடிவமைப்பதில் அமைச்சருக்கு உதவுதல் ;

(இ) இலங்கையின் தேசிய விமானப் போக்குவரத்துக் கொள்கைக்கு இணங்கவும், அத்துடன் அது தொடர்பில் அமைச்சரால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கவும் விமானப் போக்குவரத்து அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல் ;

(ஈ) சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்திக்கான செயல்நுட்பப் பணிப்புரைகளை வழங்குதலும் மற்றும் சம்பந்தப்பட்டுள்ள எல்லா திறத்தவர்களினது செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் ;

(உ) தெளிவான மற்றும் சுருக்கமான விமானப்போக்குவரத்துப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளையும் செய்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் அபிவிருத்தி செய்தல், வெளிப்படுத்தல் அல்லது பொருத்தமான வண்ணம் குறிப்பீடு செய்வதன் மூலம் ஏற்றங்கீகரித்தல், நியமங்கள் மற்றும் அத்தகைய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு தேவைப்பாடுகள், பழக்கங்கள் மற்றும் நடவடிக்கை முறைகள் எல்லா ஆட்களாலும் இணங்கியொழுகப் படுவதை உறுதி செய்வதான பயனுறு வலுவாக்க நுட்பங்களை அமுல்படுத்தலும் ;

(ஊ) முழுமையானதும் காலத்திற்குப் பொருத்தமானதுமான விமானப் போக்குவரத்து ஆலோசனையினூடாகவும் அத்துடன் விமானப் போக்குவரத்து பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பில் விமானப் போக்குவரத்து சமூகத்தினுள், விழிப்புணர்வு ஒன்றை வளர்ப்பதனை ஊக்குவித்தலும், விமானப் போக்குவரத்து சமூகத்தினரால் விமானப் போக்குவரத்து பாதுகாப்பின் உயர்தரத்தைப் பேணுவதற்கான அதன் கடப்பாடு பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்படுதலை ஊக்குவித்தலும், சிவில் விமானப் போக்குவரத்து செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள ஆட்களுக்கான விமானப் போக்குவரத்து கல்வியையும் பயிற்சியை வழங்குதலும் ;

(எ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளினால் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள், உரிமங்கள், அனுமதிப்பத்திரங்கள் மீது வேறு ஏதேனும் சட்ட அதிகாரம் அல்லது ஆவணம் என்பவற்றை வழங்குதல் ;

(ஏ) வானூர்தி விபத்துகள் மற்றும் வேறு ஏதேனும் தொடர்புற்ற சம்பவங்கள் மீது புலனாய்வினை ஆரம்பித்தல், அத்துடன் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை என்பவற்றை தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ஒழுங்கு செய்தல் ; மற்றும் விமானம் பறத்தலின் போதான ஏதேனும் பாதுகாப்பு இடர் தொடர்பாக விசாரணைகளை நடாத்துதலும், பரிகார நடவடிக்கைகளை எடுத்தலும் ;

(ஐ) இலங்கைக்கும் மற்றும் இலங்கையிலிருந்துமான வர்த்தக விமானச் சேவைகள் வான்வழிச் செலவுச் சேவைகள் என்பவற்றை செயற்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி என்பவற்றினைப் புலனாய்வு செய்தல், பரிசோதித்தல், அறிக்கையிடுதல் அத்துடன் பொதுவாக பொதுமக்களின் நலனுக்காக விமானப் போக்குவரத்து அபிவிருத்தியை முன்னேற்றுதல் அத்துடன் இந்த நோக்கத்திற்காக விமானப் போக்குவரத்து தொடர்பிலான தகவல் சேகரித்தல், பகுத்தாராய்தல், வெளியிடுதல் மற்றும் பரப்புதல் என்பவற்றுக்கான வசதிகளையும் சேவைகளையும் தாபித்தலும் வழங்குதலும் ;

(ஒ) சர்வதேச விமானச் சேவைகள், பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்தாலோசனைகள் என்பவற்றில் அமைச்சரால் தேவைப்படுத்தக் கூடியவாறான அத்தகைய முறையில் உதவுதலும், விமானச் சேவைகள் உடன் படிக்கைகளின் ஏற்பாடுகளை முறையாக அமுல் படுத்துவதை கண்காணித்தலும் உறுதிப்படுத்துதலும் ;

(ஓ) அதிகாரசபையால் அல்லது வேறு ஏதேனும் வழிகளால் வழங்கப்பட்ட பிரசுரங்களின் வழியாக வான்வழிப் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பில் தகவல்களை வழங்குதல்: வான்செலவு சார்ந்த வரைபடங்களையும், விளக்க

அட்டவணைகளையும் பிரசுரித்தல் ; வான்வழி மார்க்கங்களைத் தாபித்தல் ; வான்வழிச் செலவு, தகவல் சேவை மற்றும் வான்வழிச் செலவு, தொலைத் தொடர்புச் சேவை பற்றியவை முறையாக வழங்கப்படலை உறுதிப்படுத்தல் ;

(ஔ) வசதியாக்கல் விடயங்கள், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, அபாயகரமான பொருட்களைக் கொண்டுசெல்லுதல் மற்றும் உலக ஒருமைப்பாட்டைக் கொண்டுவருவது விரும்பத்தகுந்ததாக இருக்கின்ற வேறு ஏதேனும் தொடர்புடைய துறை போன்ற விடயங்களில் நியமங்களை அமுல்படுத்துவதற்காக, இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துக்கான குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை அமைச்சரின் அங்கீகாரத்துடன் தாபித்தல் ;

(க) உடன்படிக்கைகளினதும், ஒழுங்கமைப்புக்களினதும் நியமங்கள் மற்றும் பதிவு என்பவன இலங்கையால் அமுல்படுத்தப்படுவதில் சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்புடன் ஒருங்கிணைத்தல், பிராந்திய மற்றும் உலகளாவிய விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்புகளில் இலங்கை பங்குபற்றுவதை முன்னேற்றுதல் அத்துடன் அமைச்சரின் அங்கீகாரத்துடன் சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான விடயங்களில் சர்வதேச ரீதியாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தச் செய்வித்தல் ;

(ங) சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான விடயங்களிலும் சர்வதேச விமானப் போக்குவரத்து உடன்படிக்கைகள் பொருத்தனைகள் மற்றும் சமவாயம் என்பவற்றை ஏற்று அமுல்படுத்துவதிலும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ச) அதிகாரசபைக்கு முறையாக உரித்தளிக்கப்பட்டதும் உரித்துமாற்றம் செய்யப்பட்டதுமான ஏதேனும் ஆதனத்தை அரசின் சார்பில் சொந்தம் கொள்ளுதலும் வைத்திருத்தலும் ;

(ஞ) அதிகாரசபையின் அசையும் அல்லது அசையாத ஆதனத்தை ஈடுவைத்தல் மூலம் கடன்பணத்தைத் திரட்டுதல் உள்ளடங்கலாக அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபை உசிதமானதென்று கருதக்கூடிய வாறான அத்தகைய முறையில், பயன்படுத்தல் ;

(ட) சிவில் விமானப் போக்குவரத்தை மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக ஒன்றில் தனியாகவோ அல்லது வேறு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைகளுடன் அல்லது சர்வதேச முகவராண்மைகளுடன் அல்லது சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்தோ ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடுதல் ;

(ண) அதிகாரசபையின் கடமைகளையும் பணிகளையும் தத்துவங்களையும் நிறைவேற்றுவதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான பண்டங்களை சேவைகளை அல்லது பொருட்களை வழங்குவதற்காக அல்லது வேலைகளையும் அல்லது வேறு ஏதேனும் ஒப்பந்தங்களையும் நிறைவேற்று வதற்கான ஒப்பந்தங்களைச் செய்தல் ;

(த) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட அல்லது கொடுக்கப் பட்ட சான்றிதழ்கள், உரிமங்கள், அனுமதிப்பத்திரங் கள் அல்லது வேறு ஏதேனும் சட்ட அதிகாரங்கள் அல்லது ஆவணங்கள் என்பவற்றுக்காக மற்றும் வழங்கப்பட்ட சேவைகளுக்காக விதிக்கப்பட விருக் கின்ற விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் என்பவை மீது அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(ந) அதிகாரசபையின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமான ஆளணியினரைத் தெரிவு செய்தலும், வேலைக்கமர்த்துதலும் அத்துடன் பணியாட்டொகுதி நலன்புரித் திட்டங்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளடங்கலாக, ஊழியரின் சம்பளங்கள் சேவை நியதி நிபந்தனைகள் என்பவற் றைத் தீர்மானித்தலும் ஏற்றங்கீகரித்தலும் ;

(ஙு) உசாவுநர்களினதும் ஆலோசகர்களினதும் சேவைகளைப் பெறுதலும் ; அத்துடன் அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கவேண்டியவர்களான அற்றோணித் தத்துவக்காரர்களையும் முகவர்களையும் நியமித்தல் ;

(ஙூ) தேவைப்படுத்தப்பட்டவாறாக தகுதிவாய்ந்த ஆளணியினரை ஒப்பந்தங்களின்மீது வேலையில் ஈடுபடுத்துதலும், அத்துடன் கைத்தொழில் நியமங்களுடன் ஒத்ததாக அவர்களுடைய ஊதியங்களுக்காக ஏற்பாடு செய்தலும் ;

(ய) இச்சட்டத்தின் கீழானதும் அத்துடன் அதன் சார்பில் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரால் அதிகார சபைக்கு குறித்தொதுக்கப்பட்டதும் அல்லது கையளிக்கப்பட்டதுமான ஏதேனும் பணியைப் புரிவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு தத்துவங்களையும் பிரயோகித்தல் ;

(ர) சிவில் விமானப் போக்குவரத்தின் ஏதேனும் விடயத்தினுள் அளவையிடுதலை ஆரம்பித்தலும் நிறைவேற்றுதலும் ;

(ல) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதிகார சபைக்கு பொறுப்பிக்கப்படக்கூடியதான அல்லது கையளிக்கப்படக்கூடியதான ஏதேனும் கடமைகளை நிறைவேற்றுதல் ; அத்துடன்

(வ) காலத்திற்குக் காலம் அமைச்சர் பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதல்.

அதிகார சபையிடம் ஆதனத்தைக் கைமாற்றலும் உரித்தாக்கலும்.

8. வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்பட வேண்டியதான, (இதனகத்துப்பின்னர் "கைமாற்றத் தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்றும், அத்தேதிக்குப் பின்னரும்

(அ) வான் கலமோட்டல் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கைமாற்றப்பட்டனவும் உரித்தாக்கப்பட்டனவும், அத்துடன் கைமாற்றத் தேதிக்கு உடன் முற்போந்த தேதியில் அவருடைய உடைமையில் உள்ளதுமான அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான எல்லா ஆதனங்களும் அத்தகைய தேதியிலிருந்து பயனுறும் வகையில் அதிகாரசபைக்கு கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) வான் கலமோட்டல் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து தலைமையதிபதியினால், தலைமையதிபதியுடன் அல்லது தலைமையதிபதிக்காக செய்யப்பட்டனவும் அத்துடன் அத்தகைய கைமாற்றத்தேதிக்கு உடன் முன்னரான தேதியில் இருக்கின்றனவுமான எல்லா ஒப்பந்தங்கள், குத்தகைகள் அல்லது வாடகைக் குடியிருப்பு உடன்படிக்கைகள் அத்தகைய தேதியிலிருந்து அதிகாரசபையால் அதிகாரசபையுடன் அல்லது அதிகாரசபைக்காக செய்யப்பட்ட ஒப்பந்தங்கள், குத்தகைகள் அல்லது வாடகைக் குடியிருப்பு உடன்படிக்கைகள் என்பனவாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) வான் கலமோட்டல் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து தலைமையதிபதியினதும் அத்துடன் கைமாற்றத் தேதிக்கு உடன் முன்னரான தேதியில் இருக்கின்றனவுமான எல்லா உரிமைகள், கடப்பாடுகள், அக்கறைகள், தனிசுகள் மற்றும் பொறுப்புகள் அத்தகைய தேதியிலிருந்து அதிகாரசபையின் உரிமைகள், கடப்பாடுகள் அக்கறைகள் தனிசுகள் மற்றும் பொறுப்புக்கள் என்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

இரண்டாம் மூன்றாம் அட்டவணை பற்றி குறித்துரைத்தல்.

9. அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் இச்சட்டத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விமான நிலையங்களையும் மற்றும் இச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வான்வழிப்

போக்குவரத்து சார்ந்த வசதிகளையும், அவற்றைச் சார்ந்துள்ள காணிகளையும் அதிகாரசபைக்கு கைமாற்றலாம் அத்துடன் உரித்துமாற்றலாம். அவ்வட்டணைகளில் குறித்துரைக்கப்பட்ட வாறாக, வித்தியாசமான கட்டளைகள், விமான நிலையங்கள், வான்வழிப் போக்குவரத்து சார்ந்த வசதிகள் மற்றும் அவற்றைச் சார்ந்துள்ள காணிகள் என்பவற்றை கைமாற்றுவது மற்றும் உரித்தாக்குவது தொடர்பில் ஆக்கப்படலாம்.

கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் சில கட்டிடங்கள் மற்றும் காணிகளின் கைமாற்றம்.

10. அதிகாரசபையானது, வான்கலமோட்டல் சட்டத்தின் 20ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கும், அத்தகைய சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் புரியப்பட்ட சேவையின்பொருட்டு அல்லது அதற்காக கைமாற்றத்தேதிக்கு உடன்முன்னரான தேதியில் வருமதியாகவும் செலுத்த வேண்டியதாகவும் இருந்தனவுமான அல்லது, அத்தகைய கைமாற்றம் நடைபெற்றிராவிடின், அரசுக்கு வருமதியாக வந்திருக்கக்கூடிய ஏதேனும் பணங்களை அறவிடுவதற்கும் பெற்றுக் கொள்வதற்கும் உரித்துடையதாதல் வேண்டும்.

தனிகளையும் பொறுப்புக் களையும் அறவிடுவதற்கான அதிகாரசபையின் உரிமை.

## பகுதி III

### சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனமும், தத்துவங்களும், கடமைகளும்

11. (1) அமைச்சரவையானது அமைச்சரின் விதந்துரையின்மீது (இச்சட்டத்தில் பணிப்பாளர் தலைமையதிபதி எனக் குறிப்பீடு செய்யப்படும்) சிவில் விமானப் போக்குவரத்து தலைமையதிபதியாக இருப்பதற்கு விரும்பத்தக்கதான சிவில் விமானப் போக்குவரத்து பற்றிய அறிவும் அனுபவமுடைய பொருத்தமானவரும் தகுந்தவருமான ஆள் ஒருவரை நியமித்தல் வேண்டும். அவர் அதிகாரசபையின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனமும் தத்துவங்களும் கடமைகளும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான அத்தகைய தொழில் நியதிகள் நிபந்தனைகளுக்குட்பட்டவராதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு

ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்கு குறித்தொதுக்கப்பட்ட அத்தகைய எல்லாக் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன், அதிகாரசபையின் பணிகளின் பொது நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருத்தலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தவிர பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஆகாது.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி சுகயீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணமாக பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக புரியமுடியாதிருக்கின்றவிடத்து, அமைச்சரின் விதந்துரையின் மீதும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கவனத்திற் கொண்டும் சமுகமளிக்காத அத்தகைய காலத்தின்போது அவருடைய இடத்தில் செயலாற்றுவதற்கென பொருத்தமான ஆளை அமைச்சரவை நியமிக்கலாம்.

## பகுதி IV

### நிதி

அதிகாரசபையின் நிதியம்.

**12.** (1) அதிகாரசபையானது அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பின்வருவன அதிகாரசபையின் நிதியத்திற்குள் செலுத்தப்படல் வேண்டும் :

(அ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான ஏதேனும் சான்றிதழை உரிமத்தை, அனுமதிப்பத்திரத்தை ஏதேனும் சட்ட அதிகாரத்தை அல்லது ஆவணத்தை வழங்குவதற்காக, வலிதாக்குவதற்காக, புதுப்பித்தற்காக நீடிப்புக்காக வேறுபடுத்துவதற்காக அல்லது வேறு விடயத்திற்கேற்ப அதிகாரசபையால் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டணங்களாக விதிக்கப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையால் வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட்ட கட்டணங்களின் வழியாக விடயத்திற்கேற்ப அதிகார சபையால் அல்லது பணிப்பாளர் தலைமைய திபதியால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் பெறப்பட்ட அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஈ) அதிகாரசபையின் பயன்பாட்டுக்காக காலத்திற்குக் காலம் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்படக் கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகை களும் ; அத்துடன்

(உ) எத்தன்மையானதுமான ஏதேனும் மூலத்திலிருந்து கடன்கள் நன்கொடைகள், கொடைகள் மற்றும் மானியங்கள் என்ற வழியாக அதிகாரசபையால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(3) பின்வருவனவற்றுக்குத் தேவைப்படுவதான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் அதிகாரசபையின் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) இச்சட்டத்தின் கீழும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழும் அதிகாரசபையின் தத்துவங்களையும் பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதில், புரிவதில், நிறைவேற்றுவதில் அதிகாரசபையால் உறப்பட்ட செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு;

(ஆ) சமவாயத்தின் அல்லது வேறு ஏதேனும் சர்வதேச ஒழுங்கமைப்பின்கீழ் தாபிக்கப்பட்ட சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்தின் ஒழுங்கமைப்புக்கு

இலங்கையிலிருந்து உதவு தொகையாக செலுத்தப் படுவதற்கு; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளினால் நிதியத்தி லிருந்து செலுத்தப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட வேறு செலவினங் களையும் கொடுத்துத் தீர்ப்பதற்கு.

அதிகாரசபை கணக்குகளைப் பேணுதல்.

**13.** அதிகாரசபையானது அது தோதானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வங்கியுடன் வங்கிகளுடன் கணக்கொன்றை அல்லது கணக்குகளை ஆரம்பித்து பேணி வரலாகும் என்பதுடன், அத்தகைய கணக்கு, பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய அரசாங்கத்தில் தற்போதுள்ள நிதிசார் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படுத்தப்படுதலும் வேண்டும்.

நிதியாண்டும் கணக்குகளின் கணக்காய்வும்.

**14.** (1) அதிகாரசபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் வருமானமும் செலவினமும் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் வேறு எல்லா நிதிக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை அதிகாரசபை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் நிதிச் செயற்பாட்டையும் நிதி நிலைமையையும் பற்றிய உண்மையானதும் நியாயமானதுமான நோக்கு ஒன்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக, அதிகார சபையானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலங்கைக் கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின்கீழ், இலங்கைப் பட்டயக் கணக்காளர்களால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (2) ஆம் உட்பிரிவின்கீழ் கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் அதிகாரசபையின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

15. (1) அதிகாரசபையானது, ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அந்த நிதியாண்டின்போது அதிகாரசபையால் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகளின் ஆண்டறிக்கை ஒன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாண்டு தொடர்பிலான பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு பிரதியையும் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கச் செய்வித்தலும் வேண்டும் :— ஆண்டறிக்கை.

(அ) கணக்காய்வாளர்—தலைமையதிபதியின் அறிக்கை;

(ஆ) கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை ;

(இ) கணக்காய்வு செய்யப்பட்ட தொழிற்பாட்டுக் கணக்கு; அத்துடன்

(ஈ) பணப்புழக்கக் கூற்று.

(2) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகளை, அத்தகைய அறிக்கையும் கணக்குகளும் எந்த ஆண்டு தொடர்பிலானதோ அந்த ஆண்டை உடனடுத்துவரும் ஆண்டின் முடிவுக்கு முன்னர் பாராளுமன்றத்தின்முன்னர் இடுதல் வேண்டும்.

16. அதிகாரசபைக்குச் சொந்தமான பணமானது அமைச்சரின் அங்கீகாரத்துடனும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடனும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிணையங்களில் முதலீடு செய்யப்படலாம். நிதிகளை முதலீடு செய்தல்.

17. அதிகாரசபையானது, அமைச்சரினதும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் எழுத்திலான சம்மதத்துடனும், கொடுக்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளுக்கு இணங்கவும், மேலதிகப்பற்று அல்லது வேறு வகையில் கடன்பெறலாம் அல்லது அதிகாரசபையினது கடப்பாடுகளைச் சமாளிப்பதற்காக அல்லது இச்சட்டத்தின் அல்லது வேறு எழுத்திலான ஏதேனும் சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களை கடமைகளை பணிகளைப் பிரயோகிப்பதற்காக நிறைவேற்றுவதற்காக புரிவதற்காக அதிகாரசபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தொகைகளை கடன் நியதி பற்றிய அல்லது இணங்கிப் போதல் மூலம் பெறலாம் : அதிகாரசபையின் கடன்பெறும் தத்துவங்கள்.

ஆயின் எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் அதிகாரசபையினால், திரட்டப்பட்ட ஏதேனும் கடன்கள் தொடர்பில் வெளிநிலுவையாகவுள்ள தொகையின் மொத்தத் தொகையானது எந்நேரத்திலும் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையை விஞ்சுவதாகாது.

## பகுதி V

### அதிகாரசபையின் பணியாட்டொகுதி

அதிகாரசபையின் பணியாட்டொகுதி.

**18.** (1) அதிகாரசபையானது, அதனது பணிகளைத் திறமையாகப் புரிவதற்கு அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிக்கலாம்.

(2) அதிகாரசபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் சேவையாளர்களும் தொடர்பில் —

(அ) ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம் அல்லது அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் பதவி விலக்கலாம் :

(ஆ) அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் ஊதியமளிக்கப்படவேண்டிய வீதத்தை நிர்ணயிக்கலாம் :

(இ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் தொழிலின் நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம் : அத்துடன்

(ஈ) அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நலனுக்காக பணியாட்டொகுதி நலன்புரி மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டத்தைத் தாபிக்கலாமென்பதுடன் ஏதேனும் அத்தகைய ஏதேனும் திட்டத்துக்கு உதவு தொகைகளையும் வழங்கலாம்.

(3) அதிகாரசபையானது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லா விடயங்கள் அல்லது ஏதேனும் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

பகிரங்க அலுவலர்கள் அதிகார சபையின் பணியாட் டொகுதிக்கு நியமிக்கப்

19. (1) அதிகாரசபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்அலுவலரினதும் பொது நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளரினதும் சம்மதத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்கு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்கசேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக் கப்படுகின்றவிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலு வலருக்கும் அவர் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்பு டையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக் கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவர் தொடர்பிலும் அத்தகைய அலுவலருக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பகிரங்க அலுவலர்கள் அதிகார சபையால் ஊழியத்தில மர்த்தப்படல்.

20. (1) சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களத்தில் (இப்பிரிவில் "திணைக்களம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சேவையிலிருக்கின்றவரும் அதிகாரசபையில் வேலை கோரு பவருமான எவரேனும் பகிரங்க அலுவலரை அதிகாரசபை, ஊழியத்திலமர்த்தலாம் என்பதுடன், அத்தகைய ஊழியம் தொடர்பில், இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்டவரும் திணைக்களத்தில் சேவைபுரிகின்றவரும், திணைக்களத்தில் அவரது சேவையின் இறுதித் தேதியில் பத்து வருடங்களுக்குக் குறையாத ஒய்வூதிய சேவைக்காலத்தைக் கொண்டிருப்ப வருமாகிய பகிரங்க அலுவலர் ஒவ்வொருவரும், அத்தேதியில்

பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தேதியில் பதவி இல்லாதொழிக்கப்பட்டது என்ற ஏதுவின்மீது அவர் ஓய்வுபெற்றிருப்பாராயின், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின்கீழ், வழங்கப்பட்டிருக்கக்கூடிய, அத்தகைய ஓய்வூதியத்துக்குத் தகைமையுடையவராதலும் வேண்டும்.

(3) பத்து வருடங்களுக்குக் குறைந்த ஓய்வூதிய சேவைக் காலத்தைக் கொண்டிருப்பவரும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபைக்கு நியமிக்கப்பட்டவருமான பகிரங்க அலுவலர் ஒருவர், திணைக்களத்தில் அவரது சேவையின் இறுதித் தேதியன்று, பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தேதியன்று பதவி இல்லாதொழிக்கப்பட்டது என்ற ஏதுவின்மீது ஓய்வுபெற்றிருப்பாராயின், ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின்கீழ், வழங்கப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய பணிக்கொடையொன்றுக்கும் அவர் தகைமையுடையவராதல் வேண்டும்.

(4) (அ) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எப்படியிருப்பினும் எவரேனும் பகிரங்க அலுவலர் அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு அப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்டு, தோதான சேவைக்காலப்பகுதிக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு அவ்வதிகார சபையில் சேவை புரிகின்றவிடத்து, அதிகார சபையால் அவரது அல்லது அவனது சேவை, ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தின் ஓய்வூதியம் பெறத்தகு சேவையாகக் கருதப்படல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவு எவ்வாளுக்கு ஏற்புடைத்தாகுமோ அவ்வாள், தோதான சேவைக்காலப்பகுதியின் இறுதியில், பதவி இல்லாதொழிக்கப்பட்டது என்ற ஏதுவின்மீது பகிரங்க சேவையிலிருந்து ஓய்வுபெற்றிருப்பாராயின் வழங்கப்பட்டிருக்கக்கூடிய ஓய்வூதியத்துக்குச் சமனான அத்தகைய தொகை ஓய்வூதியமொன்றுக்குத் தோதான சேவைக்காலப் பகுதியின் இறுதியில், தகைமையுடையவராதல் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக, "தோதான சேவைக் காலம்" என்பது, அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கான அவரது நியமனத் தேதியின் பின்னர், பகிரங்க சேவையில் தொடர்ந்திருப்பாராயின் பகிரங்க சேவையில் ஓய்வூதியம்

பொறுத்துகு பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்யும்பொருட்டு, அத்தகைய ஆள், எக்காலப்பகுதிக்காக, பகிரங்க சேவையில், சேவை செய்திருக்க வேண்டுமோ அக்காலப்பகுதி எனப் பொருள்படும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏதேனும் ஏது எப்படியிருப்பினும், இப்பிரிவின்கீழ், திணைக்களத்தின் பகிரங்க அலுவலர் ஒருவர், அதிகாரசபையின் ஊழியர் ஒருவராக வருமிடத்து —

(அ) அத்தகைய அலுவலர் ஓய்வூதியமொன்றுக்குத் தகைமையுடையவராகவிருப்பின் அதிகாரசபையில் அவர் ஊழியத்திலிருக்கின்ற காலப்பகுதியில் அத்தகைய ஓய்வூதியம் அவருக்கு வழங்கப்படலாகாது.

(ஆ) அத்தகைய அலுவலர், ஓய்வூதியங்கள்மீதான குறிப்புக்களின் 2(அ) (1) (i) எனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பணிக்கொடையொன்றுக்குத் தகைமையுடையவராகவிருப்பின் ; அதிகாரசபையில் அவர் ஊழியத்திலிருக்கின்ற காலப்பகுதியில் அத்தகைய பணிக்கொடை அவருக்கு வழங்கப்படலாகாது. ஆனால், விடயத்துக்கேற்ப அதிகாரசபையில் அவரது ஊதியத்தின் முதற்றினமன்று அல்லது ஓய்வூதியமொன்றுக்குத் தகைமையுள்ளவராகும் தேதியன்று இச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) எனும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட ஓய்வூதிய நலன்புரி சமூகப் பாதுகாப்புத்திட்டம் ஒன்றின் கணக்கில் அது வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தினத்தில், அத்தகைய தொகை, கணக்கில் வரவுவைக்கப்பட்டிருக்காதவிடத்து விடயத்துக்கேற்ப அதிகாரசபையில் அவரது ஊழியத்தின் முதற் தினத்திலிருந்து அல்லது ஓய்வூதியமொன்றுக்கு தகைமையுள்ளவராகும் தினத்திலிருந்து அத்தகைய கணக்கில் அத்தகைய தொகை வரவுவைக்கப்படும் தினம் வரை அத்தகைய தொகைமீது வருடத்துக்கு பத்துசத விகிதத்திலான வட்டி அத்தகைய கணக்கில் வரவுவைக்கப்படும்போது அத்தகைய தொகையுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

சொல்லப்பட்ட குறிப்புக்களின் 2(அ) (1) (ii) ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள "அவரது ஓய்வுத் தேதியிலிருந்து பத்து வருடங்கள்" என்ற காலப்பகுதியைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்துக்காக, அவரது ஓய்வுபெறும் தேதி : அதிகாரசபையில் அவரது ஊழியத்தின் இறுதித் தேதியாகக் கருதப்படல் வேண்டும் : அத்துடன்

(இ) அத்தகைய அலுவலர், பகிரங்க சேவைகள் சேமலாப நிதியக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏதேனும் தொகைப் பணம் பெறுவதற்குத் தகைமையுள்ளவராகவிருப்பின், அத்தகைய தொகை அவருக்கு வழங்கப்படலாகாது: ஆனால், அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட நிதியமொன்றில் அவரது கணக்கிற்கு வரவுவைக்கப் படல் வேண்டும்.

(6) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், அவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆள் ஒருவர், ஓய்வூதியம் பெறுவதற்குத் தகைமையுள்ளவராக வரும் பட்சத்தில், அவ்வுட்பிரிவின்கீழ் பணிக்கொடையைப் பெற்றுக்கொள்ளத் தகைமையுடையவராதலாகாது.

## பகுதி VI

### தவறுகளும் தண்டங்களும்

அதிகார சபையின் ஆதனத்துக்கு சேதம் விளைத்தல் தவறொன்றாதல்.

**21.** (1) அதிகாரசபைக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை வேண்டுமென்று அகற்றுகின்ற, அழிக்கின்ற, சேதப்படுத்துகின்ற அல்லது, எவ்வகையில் அத்தகைய ஆதனம் பயன்படுத்தப்பட அல்லது தொழிற்படுத்தப்படக் கருதப்பட்டதோ அதற்கு முட்டுக்கட்டை போடுகின்ற அல்லது தடுக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்தாயிரம் விசேட வரைவு உரிமைக்குச் சமனான இலங்கை ரூபாக்களை விஞ்சாத தண்டமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய தண்டம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கில், அதிகாரசபை சார்பாக செய்யப்படுகின்ற விண்ணப்பத்தின்மீது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தண்டத்திற்கு மேலதிகமாக, கட்டளையில் தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய தொகையை விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கான நட்டஈடாக அதிகாரசபைக்குச் செலுத்துமாறு குற்றம்சாட்டப்பட்டவருக்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

அலுவலர் ஒருவருக்கு அல்லது சேவையாள் ஒருவருக்கு முட்டுக்கட்டை போடுதல் அல்லது தடைசெய்தல் தவறொன்றாதல்

**22.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின்கீழ் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற அதிகாரசபையின் எவரேனும் அலுவலரொருவரை அல்லது சேவையாளரை தடைசெய்கின்ற அல்லது முட்டுக்கட்டை போடுகின்ற ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்தாயிரம் விசேட வரைவு உரிமைக்குச் சமமான இலங்கை ரூபாவினை விஞ்சாத தண்டமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனை அல்லது அத்தகைய தண்டம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் அவர் ஆளாதல் வேண்டும்.

தகவல் கொடுக்கத் தவறுதல்.

**23.** முப்பத்திரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட எழுத்துமூலமான வேண்டுகோளுக்கு, இணங்கத் தவறுகின்ற அல்லது பிழையான தகவல் அல்லது விபரத்திரட்டை கொடுத்துதவுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மீது பத்தாயிரம் விசேட வரைவு உரிமைக்குச் சமமான இலங்கை ரூபாக்களை விஞ்சாத தண்டமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாத மறியற்றண்டனை அல்லது அத்தகைய தண்டம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

அதிகார சபையின் ஆதனங்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதங்களை அறவிடுதல்.

**24.** (1) ஏதேனும் வானூர்தியொன்றினால் அல்லது வானூர்தியில் அல்லது அது தொடர்பில் ஊழியத்திலமர்த்தப்பட்ட எவரேனுமாளினால் அதிகாரசபையின் ஏதேனும் ஆதனங்களுக்கு விளைவிக்கப்படும் சேதம் சம்பந்தமான விடயம் ஒவ்வொன்றிலும், அச்சேதத்தைச் சரிசெய்வதற்கான செலவு வானூர்தியின் சொந்தக்காரர், இயக்குநர் அல்லது அதற்குப் பொறுப்பானவரிடமிருந்து தனித்தனியாகவோ

அல்லது கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவும் கூட்டாகவும் அதிகாரசபையால் அறவிடப்படல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு சேதங்களை அறவிடும் நடவடிக்கையின்போது சேதத்தை சரிசெய்வதற்கான செலவு அதிகாரசபைக்குச் செலுத்தப்படும்வரை, அல்லது செலவினை மேவுவதற்காக அவசியமானதென அதிகார சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான பிணைப் பொறுப்பு, வருமதியாகவுள்ள தொகைக்காகக் கொடுக்கப்படும் வரை, அதிகாரசபையானது, அவசியமேற்படுமிடத்து, அத்தகைய வானூர்தியைத் தடுத்துவைக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ், தடுத்துவைக்கப்பட்டுள்ள வானூர்தி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் விதிப்பனவுகள் அல்லது கட்டணங்கள் முழுவதையும் அல்லது பாகமொன்றினை, அதிகாரசபையானது, தோதானது எனக் கருதுமிடத்து விட்டுவிடலாம்.

பொதுத் தண்டம்.

**25.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுடன் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியுடன் அல்லது விதியுடன் முரண்படுகின்ற அல்லது அதனுடன் இணங்கி யொழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினால் அதற்கான தண்டம் வெளிப்படையாகக் கூறப்பட்டிராத ஒராம் உட்பிரிவின் கீழான தவறு ஒன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்ட எவரேனும் ஆள், நீதிமன்றத்தின் முன்னான சுருக்கமுறையான விசாரணையின் பின்னரான குற்றத்தீர்ப்பின்மீது பத்தாயிரம் விசேட வரைவு உரிமைக்குச் சமமான இலங்கை ரூபாக்களை விஞ்சாத தண்டமொன்றுக்கு அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய தண்டம், மறியற் தண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

தவறுகளை இணக்குதல்.

**26.** தவறொன்று புரியப்பட்ட சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டு, அதிகாரசபையானது, அத்தகைய தவறுக்கு விதிக்கப் படக்கூடிய அதிகூடிய தண்டத்தின் மூன்றில் ஒன்றை விஞ்சாத தொகையொன்றுக்காக இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறை இணக்கலாமென்பதுடன், எவரேனும் அத்தகைய

தவறாளருக்கு எதிராக ஏதேனும் குற்றவழக்கு தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, அதிகாரசபையானது தீர்ப்பு வழங்கப்பட முன்னரும் அத்துடன் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்ற பின்னரும் அத்தகைய தவறை எவ்வேளையிலும் இணக்குதல் வேண்டும்.

ஆட்கள் குழுவினால் புரியப்பட்ட தவறுகள்.

**27.** இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதியின்கீழ் ஆட்கள் குழுவினால் தவறொன்று புரியப்படுகின்றவிடத்து அப்போது,—

(அ) அவ்வாட்களின் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருந்தால், அத்தவறு புரியப்பட்ட நேரத்தில் அவ்வாட்கள் குழுவின் பணிப்பாளராக, பொதுமுகாமையாளராக, செயலாளராக அல்லது அதையொத்த அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும் ; அல்லது

(ஆ) அவ்வாட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இல்லாதிருந்தால், அத்தவறு புரியப்பட்ட வேளையில், அவ்வாட்கள் குழுவின் தலைவராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது அதையொத்த அலுவலராக இருந்த ஆள் ஒவ்வொருவரும்,

அத்தகைய தவறு அவரது அறிவின்றிப் புரியப்பட்டதென அல்லது அத்தகைய தவறு புரியப்பட்டதைத் தடுப்பதற்குத் தேவையான எல்லா விழிப்புக் கவனத்தையும் தான் எடுத்ததாக எண்பித்தாலன்றி அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படல் வேண்டும்.

சட்டத்தலைமை அதிபதியின் அனுமதியைத் தேவைப்படுத்தல்.

**28.** நீதிமன்றம் எதுவும், சட்டத்தலைமை அதிபதியின் அனுமதியுடன் தவிர, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளின் அல்லது விதியின்கீழ் எதேனும் தவறை ஏற்றுக் கவனத்திற்கெடுத்தலாகாது.

## பகுதி VII

### பொது

இரகசியத் தன்மையை வெளிப்படுத்தல்.

**29.** அதிகாரசபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மற்றும் அதிகாரசபையின் எல்லா அலுவலர்களும் பணியாளர்களும், தமது கடமைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், தனது

கடமைகளையும் தத்துவங்களையும் நிறைவேற்றுகையில் அல்லது பிரயோகிக்கையில், தனது அறிவுக்குட்பட்ட, அதிகாரசபையின் அலுவல்கள் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தும் வெளிப்படுத்துகை யொன்றில் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகைமூலம், பின்வருவனவற்றைத் தவிர்த்து, அத்தகைய ஏதேனும் விடயத்தை வெளிப்படுத்துமாட்டாரெனத் தன்னை உறுதிப்படுத்திக்கொள்ளலும் வேண்டும் —

(அ) அவ்வாறு செய்யுமாறு சட்டமன்றத்தினால் தேவைப் படுத்தப்படுகின்றபோது : அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான ஏதேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கும் அல்லது கடமைகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக.

தத்துவங்களைக் கையளித்தல்.

**30.** (1) அதிகாரசபையானது, எழுத்துமூலமும் அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைக்கு அமைவாகவும் இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது ஒழுங்குவிதியின்கீழான அதன் ஏதேனும் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளை அதிகாரசபையின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்குக் கையளிக்கலாம் என்பதுடன் எவரேனும் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர், அதிகாரசபையின் பெயரிலும் அதன் சார்பிலும் அத்தகைய தத்துவத்தை பணியை அல்லது கடமையைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் கையளிப்புச் செய்யப்பட்டது எப்படியிருப்பினும் அவ்வாறு கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை பணியை அல்லது கடமையை அதிகாரசபையே பிரயோகிக்கலாம், புரியலாம் அல்லது நிறைவேற்றலாம் என்பதுடன் அத்தகைய கையளிப்பை எவ்வேளையிலும் கைமீட்கவும் செய்யலாம்.

*அமைச்சரின் எழுத்திலான பணிப்புக்கள்.*

**31.** (1) அமைச்சரானவர், அதன் தத்துவங்களை அல்லது பணிகளை அல்லது கடமைகளைப் பிரயோகித்தல் அல்லது புரிதல் அல்லது நிறைவேற்றுதல் பற்றி, எழுத்துமூலமான அத்தகைய பொதுவான அல்லது விஷேட பணிப்புக்களைக் காலத்துக்குக்காலம் அதிகாரசபைக்கு வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புக்களுக்கு வலுவளித்தல் அதிகாரசபையினது கடமையாதலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர், அவரால் தேவைப்படுத்தப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் விபரத்திரட்டுக்களை, கணக்குகள் மற்றும் அதிகாரசபையின் வேலையுடன் தொடர்பான வேறு ஏதேனும் தகவலைக் கொடுத்துதவுமாறு அதிகாரசபைக்குப் பணிப்புக்கள் வழங்கப்படலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கு வலுவளித்தல் அதிகாரசபையின் கடமையாதலும் வேண்டும்.

*விபரத் திரட்டுக்கள் மற்றும் தகவல்.*

**32.** (1) இச்சட்டத்தின்கீழான அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதிகாரசபையை இயலச்செய்யும் நோக்கத்துக்காக அதிகாரசபை அல்லது அதிகாரசபையால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், எழுத்திலான அறிவித்தல்மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா விபரத் திரட்டுக்களை அல்லது தகவலை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் அதிகாரசபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு கொடுத்துதவுமாறு எவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல்மூலம் ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலை கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், அத்தகைய விபரத்திரட்டை கொடுத்துதவுவதிலிருந்து அல்லது அத்தகைய தகவலை வெளிப்படுத்துவதிலிருந்து தடுக்கப்பட்டால் தவிர, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(3) அதிகாரசபை அல்லது அதன் எவரேனும் உறுப்பினர் பணிப்பாளர், தலைமையதிபதி அல்லது அதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது நீதிமன்றத்தினால் அவ்வாறு செய்வதைத் தேவைப்படுத்தினாலன்றி அல்லது இச்சட்டத்தின் கீழான அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கின்ற புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற நோக்கத்துக்காகத் தவிர, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலை, எவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்தவோ அல்லது பயன்படுத்தவோ ஆகாது.

ரூபாய்களில் வி.வ.உ.வின் சமன்பாடு.

**33.** இச்சட்டத்தின் VI ஆம் பாகத்தின்கீழ் தவறொன்றுக்காக குற்றப்பணம் ஒன்றை விதிக்கும் நோக்கத்திற்கு இலங்கை ரூபாய்களில் விசேட வரவு உரிமையின் சமன்பாடானது எந்தத் தவறு தொடர்பில் அத்தகைய குற்றப்பணம் விதிக்கப்படுகின்றதோ அந்தத் தவறு புரியப்படும் தேதிக்கு முந்திய தேதிக்கான விசேட வரவு உரிமையின் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட ரூபாவின் பெறுமதியின் அடிப்படையில் செய்யப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல்.

**34.** அதிகாரசபையின் எல்லா உறுப்பினர்கள், பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அதிகாரசபையின் எல்லா அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோர் தண்டனைச் சட்டக் கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படல் வேண்டும்.

அதிகாரசபை அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படல்.

**35.** அதிகாரசபையானது லஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுதல்.

**36.** (1) அதிகாரசபையின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனம் கொள்ளப்படத் தேவைப்படுத்தப்பட்டிருக்குமிடத்தும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் அந்நோக்கத்துக்காக அவ்வாதனத்தின் உத்தேச கொள்ளலை அவ்வாதனத்தின் அங்கீகரிக்குமிடத்தும், காணிகொள்ளல் சட்டத்தை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்காக பகிரங்க நோக்கத்துக்குத் தேவைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அச்சட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டு, அதிகாரசபைக்குக் கைமாற்றவும்படலாம்.

(2) காணிகொள்ளல் சட்டத்தின்கீழ் அதிகாரசபைக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்காகச் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொகை, அதிகாரசபையால் செலுத்தப்படல் வேண்டும்.

அரசின் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்கள் இரண்டையும் அதிகார சபைக்கு கிடைக்கச் செய்தல்.

37. (1) அதிகாரசபையின் நோக்கத்துக்காக, அரசின் ஏதேனும் அசைவற்ற ஆதனம் தேவைப்படுத்தப்படுகின்ற விடத்து, அத்தகைய நோக்கம், முடிக்குரிய காணிகள் கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் எந்நோக்கத்துக்காக அத்தகைய ஆதனத்தின் விசேட மானியம் அல்லது குத்தகை வழங்கப்படலாமோ அந்நோக்கமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதிகாரசபைக்கான அத்தகைய ஆதனத்தின் விசேட மானியமொன்றுக்கு அல்லது குத்தகைக்கு ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் நோக்கத்துக்காக அரசின் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அசைவுள்ள ஆதனத்தின் உடைமையையும் பயன்பாட்டையும் அதிகாரசபைக்கு மாற்றலாம் என்பதுடன் அதிகாரசபைக்கு உரித்தாக்கவும் செய்யலாம்.

தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் உறப்பட்ட செலவு நிதியத்திலிருந்து செலுத்தப்படல்.

38. (1) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பு அதிகாரசபையால் அல்லது அதற்கு எதிராக கொண்டுவரப்படும் ஏதேனும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கிற்காக அதிகாரசபையால் உறப்படும் ஏதேனும் செலவு, அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய தொடர்ச்சி அல்லது குற்றவழக்கில் அதிகாரசபையில் செலுத்தப்பட்ட அல்லது அதிகாரசபையால் அறவிடப்பட்ட ஏதேனும் செலவு அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படலும் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பணிப்புரையின்மீது, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவரால் அல்லது அவளால் புரியப்பட்ட அல்லது புரிய எத்தனிக்கப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், அவர் அல்லது அவளுக்கு எதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கொண்டுவரப்பட்ட ஏதேனும்

துடர்ச்சி அல்லது குற்றவழக்கில், (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளினால் உறப்பட்ட அத்தகைய ஏதேனும் செலவு, நன்னோக்கில் அத்தகைய செயல் புரியப்பட்டது என நீதிமன்றம் தீர்த்தால் அவ்வாறு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய செலவு அவரால் அல்லது அவளால் அறவிடப்படக்கூடியதாக விருந்தாலன்றி அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**39.** (1) அமைச்சரானவர் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தினால் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும், அத்துடன் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றியும் அமைச்சர் அதிகாரசபையுடனான கலந்தாலோசனையுடனும் பின்வருவன தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :

(அ) அதிகாரசபையால் வழங்கப்படுகின்ற வேறுபட்ட சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பில் விதிக்கப்பட வேண்டிய விதிப்பனவுகளைத் தீர்மானிப்பதற்கான வழிகாட்டிகளை விதித்துரைத்தல் ; அத்துடன்

(ஆ) ஏழாம் பிரிவின்கீழ் தத்துவங்களை, பணிகளை மற்றும் கடமைகளைப் பிரயோகிப்பதில், புரிவதில், நிறைவேற்றுவதில் அதிகாரசபைக்கு அவசியமாக வரக்கூடியதான வேறு ஏதேனும் கருமங்கள்

(3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படவேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின், வசதியானளவு விரைவில், அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய எதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்பு செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அது அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

(5) எத்தேதியில், அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி அங்ஙனம் நீக்கப்பட்டதாகக் கருதப்பட்டதோ அத்தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும்.

**விதிகள்.**

**40.** (1) அதிகாரசபையானது, இச்சட்டத்தினால் எவ்விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கும்படி தேவைப்படுத்தப்படுகின்றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அவ்வெவ்வை அல்லது ஏதேனும் விடயம் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அதிகாரசபையால் ஆக்கப்பட்ட எவ்விதியும் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் வரையும் பயனுறுதலாகாது.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

**41.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

**42.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய

"சட்டம்" என்பது, இச்சட்டமென்று பொருள்படும் என்பதுடன் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிகளையும் அல்லது விதிகளையும் உள்ளடக்கும்.

"விமானத்தளம்" என்பது வானூர்திகள் தரையிறங்குவதற்கு அல்லது புறப்படுவதற்கு முழுமையாகவாயினுஞ்சரி, அல்லது பகுதியளவிலாயினுஞ்சரி, பயன்படுத்தப்படுவதற்கென முன்னப்பட்ட ஏதேனும் காணி அல்லது

நீர்ப்பரப்பு எனவும் அதன்கண் அமைந்துள்ள அல்லது அதனைச் சார்ந்துள்ள எல்லாக் கட்டிடங்கள், கூடாரங்கள், களங்கள், இறங்குதுறைகள் அத்துடன் வேறு கட்டமைப்புகள் எனவும் பொருள்படும் ;

"வான்கலமோட்டல் சட்டம்" என்பது வான்கலமோட்டல் சட்டம் (அத்தியாயம் 365) எனப் பொருள்படும் ;

"சமவாயம்" என்பது 1944 ஆம் ஆண்டு திசெம்பர் 7 ஆம் தேதி சிகாகோவில் கைச்சாத்திடப்பட்ட சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து மீதான சமவாயம் எனப் பொருள்படும் ;

"விசேட வரைவு உரிமை" என்பது, சர்வதேச நாணய நிதியத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டவாறான விசேட வரைவு உரிமை எனப் பொருள்படும் ; அத்துடன்

"நியமங்கள்" என்பது சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின் கீழ் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்புப் பேரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களென்பதுடன், சமவாயத்தின் 38 ஆம் உறுப்புரையின் கீழ், எந்நியமங்களுக்கு இலங்கை வேறுபடுத்தலைக் கோப்பிடவில்லையோ அந்நியமங்கள் மற்றும் உரியமுறையில் செயற்படுத்தப்பட்டு வலுவாக்கப்படுகின்ற சமவாயத்தின் 37 ஆம் உறுப்புரையின்கீழான சிவில் விமானப் போக்குவரத்து ஒழுங்கமைப்புப்பேரவையினால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட விதந்துரைக்கப்பட்ட வழக்காறுகள் எனவும் பொருள்படும்.

வான்வெளிப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழான பணிப்பாளர் தலைமை அதிபதியின் தத்துவங்கள் பதிலேலாராம்

**43.** (1) எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் முரணானது எது எப்படியிருப்பினும், வான்கலமோட்டல்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து பணிப்பாளர் தலைமையதிபதியினால் பிரயோகிக்கப்படுகின்ற, நிறைவேற்றப்படுகின்ற, புரியப்படுகின்ற வான்கலமோட்டல் சட்டத்தின்கீழான தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் நியமித்த தேதியிலிருந்தும் அதன் பின்பும் அத்தகைய வான்கலமோட்டல் சட்டம் வலுவிலிருக்கும் வரையும், அது மட்டும் 11 ஆம் பிரிவின்கீழ் அல்லது இச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்

பட்ட சிவில் விமானப் போக்குவரத்து தலைமையதிபதியினால் பிரயோகிக்கப்படுதலும் நிறைவேற்றப் படுதலும் புரியப்படுதலும் வேண்டும் என்பதுடன் வான்கலமோட்டல் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்பும் அத்தத்துவங்கள், கடமைகள், மற்றும் பணிகளைப் பிரயோகிக்காது ஒழிதலும், நிறைவேற்றாது ஒழிதலும், புரியாது ஒழிதலும் வேண்டும்.

*பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமை யதிபதியினால் பிரயோகிக் கப்படல்.*

(2) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன் பின்னரும், அமைச்சருக்கு வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை, அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிப்பதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிக்கின்ற வான்வெளிப் போக்குவரத்துச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய சட்டம் வலுவிலிருக்கும் மட்டும் இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அத்தத்துவங்கள் கடமைகள் அல்லது பணிகளைக் கையளிப்பதற்கான அமைச்சருக்குள்ள தத்துவங்களாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

## முதலாம் அட்டவணை

### அதிகாரசபை மற்றும் அதன் உறுப்பினர்கள் தொடர்பான ஏற்பாடுகள்

1. இச்சட்டத்தின் 3(1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் ஆளொருவர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து (இவ்வட்டவணையில் இதன்கத்துப்பின்னர் நியமன உறுப்பினர் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்

(அ) பாராளுமன்றத்தின், ஏதேனும் மாகாண சபையில் அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினரொருவராக அவர் இருப்பின் அல்லது வரின் :

(ஆ) இலங்கைப் பிரஜையாக அவர் இல்லாதிருப்பின் அல்லது இலங்கைப் பிரஜையாக இருப்பதிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டால் :

(இ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவர் எனக் காணப்படின் அல்லது பிரகடனப்படுத்தப்படின் :

(ஈ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மறியற் தண்டனையை அனுபவிப்பவராக அல்லது அனுபவித்தவராக அவர் இருப்பின் ; அல்லது

(உ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அவர் வங்கிமுறிந்தவொருவர் மற்றும் பொறுப்பு விடுவிக்கப்படாத வங்கிமுறிந்தவரொருவராக அவர் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பின் ;

2. இறப்பு, பதவிதுறத்தல், பதவியிலிருந்து அகற்றப்படுதல் என்பவைமூலம் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று வருட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகிக்கலாமென்பதுடன் பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டாலன்றி மீள் நியமனத்துக்கு அவர் தகைமையுடையவராதலும் வேண்டும்.

3. அமைச்சர், குறித்தொதுக்கப்பட்ட காரணத்துக்காக, அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரை பதவியிலிருந்து அகற்றலாம்.

4. அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவர், அமைச்சருக்கு முகவரியிட்டு அப்பயன்பட எழுதிய கடிதம்மூலம் பதவி விலகலாம் என்பதுடன் அமைச்சரால் எழுத்துமூலம் அது ஏற்றுக்கொள்ளப்படுவதன்மீது, அத்தகைய பதவித்துறப்பு பயனுறுதலும் வேண்டும்.

5. அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பு, பதவி துறத்தல், பதவியிலிருந்து அகற்றப்படல் என்பவைமூலம் பதவியை வறிதாக்கும் விடயத்தில், அமைச்சர், இச்சட்டத்தின் 3(1) (இ) மற்றும் 3(3) என்னும் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய உறுப்பினரைப் பின்னுறுகின்ற வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம். அத்தகைய நியமனம் செய்யப்பட்ட உறுப்பினரின் இடத்துக்கு அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட எவரேனும் ஆள் எவ்வுறுப்பினரைப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

6. அதிகாரசபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக, இயலாமை காரணமாக, அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாகத் தமது கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதவராயிருக்குமிடத்து, அத்தகைய இயலாமைபற்றி எழுத்துமூலம் அமைச்சருக்கு அறிவிப்பது அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். அமைச்சர் இச்சட்டத்தின் 3(1) (இ), 3(3) மற்றும் ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அத்தகைய காலப்பகுதியில் அவருடைய இடத்திற்குச் செயலாற்றுவதற்கென வேறு ஓர் ஆளை நியமிக்கலாம்.

7. நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன், அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு, கூட்டங்களில் சமூகமளிப்பது தொடர்பில் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம், அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம்.

8. (1) தவிசாளர், அவரது சொந்தப் பிரேரணைமீது அல்லது அதிகாரசபையின் நிறைவேற்று அலுவலரின் வேண்டுகோளின்மீது உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டலாம்.

(2) அதிகாரசபையின் தவிசாளர், சமுகமாயிருக்குமிடத்து அதிகாரசபையின் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் தவிசாளர் சமுகமாயிராதவிடத்து, உபதவிசாளர் அல்லது அவர் சமுகமாயிராதவிடத்து, தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்காதல் வேண்டும்.

(4) அதிகாரசபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமைதாங்கும் ஆள் அவரது வாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதல் வேண்டும்.

(5) இப்பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அதிகாரசபையானது, அதிகாரசபையின் கூட்டங்கள் தொடர்பிலும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றுதல் தொடர்பிலும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

9. அதிகாரசபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமுள்ளது என்ற காரணத்தால் அல்லது அதன் உறுப்பினர் எவரினதும் நியமனத்தில் குறைபாடு உளது என்ற காரணத்தினால் மட்டும் அதிகாரசபையின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

10. (1) அதிகாரசபையின் இலச்சினையானது, அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படவும், திட்டமிடப்படவும்படலாம், அத்துடன் அதிகாரசபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும்படலாம்.

(2) அதிகாரசபையின் இலச்சினை, அதிகாரசபை காலத்திற்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(3) அதிகாரசபையின் இலச்சினையானது அதிகாரசபையின் அனுமதியுடனின்றியும், அதிகாரசபையின் இரு உறுப்பினர்களினது முன்னிலையிலுமன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்ததற்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) அதிகாரசபையானது, அதிகாரசபையின் இலச்சினை பொறிக்கப்பட்ட சாதனங்கள், ஆவணங்கள் பற்றிய ஒரு பதிவேட்டைப் பேணி வருதலும் வேண்டும்.

## இரண்டாம் அட்டவணை (பிரிவு 9)

### விமான நிலையங்கள்

1. கட்டுநாயக்க விமான நிலையம்
2. இரத்மலானை விமான நிலையம்
3. பலாலி விமான நிலையம்
4. அம்பாறை விமான நிலையம்
5. மட்டக்களப்பு விமான நிலையம்
6. அனுராதபுர விமான நிலையம்

7. வீரவில விமான நிலையம்
8. புத்தளம் விமான நிலையம்
9. கொக்கல விமான நிலையம்
10. சீகிரிய விமான நிலையம்
11. கட்டுகுருந்த விமான நிலையம்
12. வவுனியா விமான நிலையம்
13. திருகோணமலை விமான நிலையம்
14. ஹிங்குருகொட விமான நிலையம்

## மூன்றாம் அட்டவணை (பிரிவு 9)

1. கந்தவல வீதி, இரத்மலானையில் அமைந்துள்ள சிவில் விமானப் போக்குவரத்து பயிற்சி நிலையமும் அதன் கண்ணுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் அவற்றைச் சார்ந்துள்ள காணியும்.

2. இரத்மலானை, அத்திடியவில் அமைந்துள்ள வான்வெளி போக்குவரத்து தகவல் தொடர்பு நிலையமும் அதன் மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும் மற்றும் சார்ந்துள்ள காணியும். அத்துடன் அதனைச் சார்ந்துள்ள காணியும்

3. கம்பஹா மடம்பெல்லவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கான வானொலி வான்சேவைகள் வழிகாட்டியும் அதன் மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும், அத்துடன் அதனைச் சார்ந்துள்ள காணியும்.

4. கம்பஹா, பமுணுகம, கப்புகொடவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஓடுபாதைக்கான வானொலி வான்சேவைகள் வழிகாட்டி அதன் மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும், அத்துடன் அதனைச் சார்ந்துள்ள காணியும்.

5. பத்தரமுல்லை, தலங்கமவில் அமைந்துள்ள வான்வித்தை தகவல்பெறும் நிலையமும் அதன் மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும், அத்துடன் அதனைச் சார்ந்துள்ள காணியும்.

6. பேதுருதாலகால மலையில் அமைந்துள்ள தொலை இயக்கமானி நிலையமும் அதன் மீதுள்ள கட்டிடங்களும் கட்டமைப்புக்களும், அத்துடன் அதனைச் சார்ந்துள்ள காணியும்.

7. நுவரெலியா மாவட்டம், பேதுருதாலகாலவில் அமைந்துள்ள வேறு ஏதேனும் கட்டமைப்பு உட்பட விமான சேவைகள் பணியாட்டொகுதிக்கான ஓய்வு விடுதி அமைக்கப்பட்டுள்ள நிலமும் அல்லது

8. அநுராதபுர மாவட்டத்தில் கிழக்கு நுவரகம் பளாத பிரதேசச் செயலாளர் பிரிவில் இல. 249 – II ஆம் கட்ட கிராம அலுவலர் பிரிவின் எல்லைக்குட்பட்ட அநுராதபுரம் புதிய நகரத்தில் அமைந்துள்ள காணித்துண்டு இல. 976 உடைய ஹெக்டேயர் 0.125 அளவு விசாலமுடைய காணி.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்வீதி, கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.